**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண்.30/2022**
**பிரதிவாதி தரப்பு சாட்சி:1**

பெயர்:சிவசுப்பிரமணியம் (பி.வா.சா. 1) நாள்: 03.06.2026

த.பெ:

**2026ம் ஆண்டு ஜுன் மாதம் 03ம் நாள் புதன்கிழமை** பிரதிவாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் பொன்ராஜ் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**பி.வா.சா1 – குறுக்கு விசாரணை (வாதி தரப்பு):–**

இந்த வழக்கில் நான் எதிர்வாதத்துடன் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆதியில் எனது தகப்பனாரிடம் இருந்து வேறு ஒருவரும், அவரிடம் இருந்து வாதி மேற்படி சொத்தை வாங்கி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி காலி இடத்தில் அளவு 7 1/2 செண்ட் என்றால் சரிதான். மேற்படி காலி இடத்தை சுற்றிலும் எனக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். வாதி பூமியில் அவர்களது அத்தப்படி அவர்கள் அனுபவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நீதிமன்றம் மூலம் ஆணையர் நியமித்து சர்வேயர் மூலம் அளவிட எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், அதனால் அளப்பதற்கு நான் ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் சரியல்ல. 04.09.2017தேதி வாதி விலைக்கு வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு வாதி தான் உரிமையாளர் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழபுறம் எனக்கு சொந்தமான வீடு மற்றும் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு மற்றும்மேற்கில் எனக்கு பாத்தியப்பட்ட

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.03 09:57:32 +0530

சொத்து உள்ளது என்றால் சரிதான்.

2. இந்த வழக்கை வாதி தாக்கல் செய்த பின்னிட்டு நான் கம்பிவேலி போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் அந்த இடத்தில் கம்பிவேலி அமைத்து வாதியின் பூமியை அத்துமீறி நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக வாதி மலையம்பாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றாலும், மேற்படி சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த காரணத்தால் போலீசார் சமாதானம் பேசி அனுப்பிவைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் போட்ட கம்பிவேலி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதால் தாவா சொத்தை அளவீடு செய்ய ஆட்சேபணை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை அளக்க முற்படும் போதெல்லாம் நான் அதை தடுத்தும் வருவாய் துறை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு தராமல் சொத்தைஅளவீடு செய்ய விடாமல் தடுத்தேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டதால் நான் வாதியிடம் இருந்து சொத்தை வாங்க முயற்சி செய்தேன் என்றாலும், அதற்கு வாதி ஒத்துழைக்காத காரணத்தால் இந்த தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அளவீடுசெய்ய ஒத்துழைப்பு தராமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தின் தென்புற அத்தில் உள்ள சுவரை இடித்து கிழமேல் ரோட்டில் இருந்து வண்டி வாகனங்கள் ஓட்டி செல்ல தடம் ஏற்படுத்தி உள்ளேன் என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.03 09:57:37 +0530

சரியல்ல. வாதி கிழமேல்ரோட்டில் இருந்து தாவா சொத்திற்கு வரமுடியாத அளவிற்கு ஒரு இரும்பு கேட் போட்டு பூட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, வாதி தான் இரும்பு கேட் போட்டு பூட்டியுள்ளார். வாதிக்கு சொந்தமான இடத்தில் தென்னை மட்டைகளை போட்டு ஆக்கிரமிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும் வாதிக்கும் உள்ள பிரச்சனையை நீதிமன்றத்தில் ஆணையர் நியமித்து அளந்தால் வாதிக்கும் எனக்கும் உள்ள பிரச்சனை முடிந்துவிடும் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்ததால் தான் அளப்பதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி அமைதியான முறையில் சொத்தை அனுபவித்து வருவதற்கு நான் இடையூறாக இருப்பதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை கோருகிறார் என்றால் சரியல்ல. வாதி தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைத்தால் எனக்கும் வாதிக்கும் உள்ள பிரச்சனை முடிவுக்கு வந்துவிடும் எனவே தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.03 09:57:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.